காஞ்சிபுரத்தை தலைநகராகக் கொண்டு நரசிம்மவர்ம பல்லவன் கி.பி.630 முதல் கி.பி.668 வரை ஆட்சி செய்தார். வாதாபியை அழித்ததால் வாதாபி கொண்டான் என்றும் அறியப்பட்டான். இந்த வாதாபி தற்போது வடகர்நாடகா மாநிலத்தில் பாகல்கோட் மாவட்டத்தில் உள்ளது.

திருவள்ளூர் அருகே பெரியகுப்பம் கிராமத்தில் 32 அடி உயரத்தில் மிக பிரம்மாண்டமான ஸ்ரீவிஸ்வரூப பஞ்சமுக ஆஞ்சநேயர் சுவாமி சிலை உள்ளது. இது 2004 ஜூலை 6-ம் தேதி ஸ்ரீவிஸ்வரூப பஞ்சமுக ஆஞ்சநேய சுவாமி அறக்கட்டளை சார்பில் மகாபிரதிஷ்டை செய்யப்பட்டது.

சின்னச் சின்னதாய்

விசிக தலைவர் திருமாவளவனுக்கு, மத்திய அரசு இசட் பிரிவு பாதுகாப்பும், மாநில அரசு கூடுதல் பாதுகாப்பும் வழங்க வலியுறுத்தி அரியலூரில் நேற்று அக்கட்சியினர் நடத்திய உண்ணாவிரத போராட்டத்தில் பங்கேற்றோர். படம்: பெ.பாரதி

தா.பழூரில் மர்மமான முறையில் உயிரிழந்து கிடந்த இளைஞர்

■ அரியலூர்

அரியலூர் மாவட்டம் தா.பழூரை அடுத்த காரைகாட்டான்குறிச்சி கிராமத்தைச் சேர்ந்தவர் ராமச்சந்திரன் மகன் ராம்குமார்(28). ஏசி மெக்கானிக்கான இவர், நவ.8-ம் தேதி வீட்டை விட்டு வெளியே சென்றவர் வீடு திரும்பவில்லை.

இந்நிலையில், தா.பழூர் அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் ராம்குமார் தலை மற்றும் முகத்தில் காயங்களுடன் மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் கிடப்பதாக கிடைத்த தகவலின்பேரில், சம்பவ இடத்துக்கு சென்ற தா.பழூர் போலீஸார், ராம்குமார் உடலை கைப்பற்றி ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பிவைத்தனர். மேலும், இதுகுறித்து வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

புறவழிச்சாலை திட்டத்தை கைவிட கோரி ஆர்ப்பாட்டம்

■ அரியலூர்

திருச்சி- சிதம்பரம் தேசிய நெடுஞ்சாலையில் ஜெயங்கொண்டத்தில் இருந்து மீன்சுருட்டி வரை புறவழிச் சாலை அமைக்க விளை நிலங்களில் அளவீடு செய்யப்பட்டு எல்லை கல் நடப்பட்டுள்ளது.

இந்நிலையில், விளைநிலங்களில் தேசிய நெடுஞ்சாலை அமைக்கப்பட்டால், ஏழை, எளிய விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவர். எனவே, இத்திட்டத்தை கைவிட வேண்டும் என வலியுறுத்தி அரியலூர் மாவட்டம் மீன்சுருட்டியில் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்துக்கு, விவசாயி சகாதேவன் தலைமை வகித்தார். விவசாயிகள் எம்.இளையராஜா, கலியபெருமாள், ராஜாபெரியசாமி, முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் முல்லை நாதன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

அரியலூர் மாவட்டம் மீன்சுருட்டியில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள்.

மனைப் பட்டா, அடிப்படை வசதிகள் கோரி

அயன்பேரையூர் பர்மா காலனி மக்கள் ஆர்ப்பாட்டம்

குறைதீர் கூட்டத்தில் ஆட்சியரிடம் மனு

■ பெரம்பலூர்

வீட்டுமனைப் பட்டா, அடிப்படை வசதிகள் கோரி பெரம்பலூர் ஆட்சியர் அலுவலகம் முன்பு நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அயன்பேரையூர் பர்மா காலனி மக்கள், பின்னர் ஆட்சியரிடம் மனு அளித்தனர்.

பெரம்பலூர் ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர் கூட்டம் ஆட்சியர் ந.மிருணாளினி தலைமையில் நேற்று நடைபெற்றது. இதில், பொதுமக்களிடம் இருந்து 356 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டன.

வேப்பந்தட்டை வட்டம் அயன்பேரையூர் கிராமம் பர்மா காலனியைச் சேர்ந்த மக்கள், தாங்கள் வசிக்கும் இடங்களுக்கு பட்டா வழங்க வேண்டும். அடிப்படை வசதிகள் செய்துதர வேண்டும் எனக் கோரி ஆட்சியரிடம் மனு அளித்தனர். முன்னதாக, ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுகுறித்து அவர்கள் கூறியது: 1971-ம் ஆண்டு உருவாக்கப்பட்ட பர்மா காலனியில், இலங்கை- பர்மாவில் இருந்து வந்தவர்கள் வசித்து வருகிறோம். எங்களுக்கு அரசு சார்பில் வீட்டுமனைகள் வழங்கப்பட்ட போதும், பட்டா வழங்கப்படவில்லை. அந்த இடத்தில் வீடு கட்டி வசித்து வருகிறோம்.

ஆனால், பட்டா இல்லாததால், சில வீடுகளுக்கு மின் இணைப்பு பெற முடியவில்லை. மேலும், தெரு மின்விளக்கு, கழிப்பறை, சாலைகள், குடிநீர், பேருந்து நிறுத்தம், ரேஷன் கடைகள்போன்ற அடிப்படை வசதிகள் செய்துதரப்படவில்லை. இந்த நிலை நீடித்தால், நாங்கள் ஊரை காலி செய்துவிட்டு, ரேஷன் கார்டு, ஆதார் கார்டுகளை அரசிடம் ஒப்படைத்து விடுவோம் என தெரிவித்தனர்.

இதேபோல, "வேப்பந்தட்டை வட்டம் கிழக்கு பெரியம்மாபாளையம் பகுதியில் விவசாயத்துக்கு மின் விநியோகம் செய்துவந்த 2 மின்மாற்றிகள் தற்போது செயல்படவில்லை. இதனால், பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியவில்லை.

எனவே, மின்மாற்றிகள் செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை மனு அளித்தனர்.

பெரம்பலூர் ஆட்சியர் அலுவலகம் முன்பு நேற்று ஆர்ப்பாட்டம் நடத்திய அயன்பேரையூர் பர்மா காலனி பொதுமக்கள்.

புரட்சி தமிழகம் கட்சியினர் ஆர்ப்பாட்டம்

■ பெரம்பலூர்

புரட்சி தமிழகம் கட்சியினர் பெரம்பலூர் ஆட்சியர் அலுவலகம் முன்பு நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மாவட்டச் செயலாளர் காசிராஜன் தலைமை வகித்தார். இதில், கல்விக்கடன் ரத்து, பழைய ஓய்வூதிய திட்டம் உள்ளிட்ட திமுகவின் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். பெரம்பலூரில் சட்டவிரோத கல்குவாரிகளின் உரிமங்களை ரத்து செய்ய வேண்டும். புரட்சி தமிழகம் கட்சித் தலைவர் ஏர்போர்ட் மூர்த்தி மீது குண்டர் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள பொய் வழக்கை ரத்து செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

தவெக கூட்ட நெரிசல் உயிரிழப்பு வழக்கு

கரூர் பவர் கிரிட் அதிகாரிகளிடம் சிபிஐ அதிகாரிகள் விசாரணை

■ கரூர்

கரூரில் தவெக பிரச்சாரக் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக சிபிஐ அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர். இதுதொடர்பாக 300-க்கும் மேற்பட்டோருக்கு சம்மன் அனுப்பி, விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

தொடர்ந்து, தவெக பிரச்சார வாகனத்தில் இருந்த கேமரா பதிவுகள், நிகழ்ச்சியில் பங்கேற்றவர்களின் விவரங்கள் உள்ளிட்ட ஆவணங்களை கரூர் சுற்றுலா மாளிகையில் தங்கியுள்ள சிபிஐ அதிகாரிகளிடம், தவெக நிர்வாகிகள் ஒப்படைத்து, விளக்கம் அளித்தனர்.

இந்நிலையில், கரூர் மாவட்டம் க.பரமத்தியில் மத்திய மின் அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தமிழ்நாடு பவர் கிரிட் கார்ப்பரேஷன் அதிகாரிகள் 2 பேர் சிபிஐ விசாரணைக்கு நேற்று ஆஜராகினர். அவர்களிடம் சம்பவம் நடந்த அன்று மின் விநியோகம், மின் துண்டிப்பு உள்ளிட்டவை தொடர்பாக விசாரணை நடைபெற்றது. தொடர்ந்து, பவர்கிரிட் கார்ப்பரேஷன் சார்பில் ஆவணங்கள் ஒப்படைக்கப்பட்டன. மேலும், ஆம்புலன்ஸ் உரிமையாளர்கள், ஓட்டுநர்கள் என 6-க்கும் மேற்பட்டோர் நேற்று விசாரணைக்கு ஆஜராகினர்.

திருச்சி நவல்பட்டு காவலர் பயிற்சிப் பள்ளியில் நேற்று ஆய்வு நடத்திய தமிழ்நாடு காவலர் பயிற்சி தலைமையக ஐ.ஜி. ஜெயகவுரி.

திருச்சி நவல்பட்டு காவலர் பயிற்சி பள்ளியில் தலைமையக ஐ.ஜி. ஆய்வு

■ திருச்சி

திருவெறும்பூர் அருகே நவல்பட்டில் உள்ள காவலர் பயிற்சி பள்ளி, திருச்சி மற்றும் தஞ்சாவூரில் உள்ள பணியிடை பயிற்சி மையங்களில் தமிழ்நாடு காவலர் பயிற்சி தலைமையக ஐ.ஜி. ஜெயகவுரி நேற்று ஆய்வு செய்தார்.

அப்போது, அங்கு பணிபுரியும் போலீஸாரிடம், "காவலர்களுக்கு பயிற்சியளிக்கும் பயிற்றுநர்கள் தங்கள் திறன்களை மேம்படுத்திக்கொண்டு, மிகச்சிறந்த காவலர்களை உருவாக்க வேண்டும்" என அறிவுறுத்தினார். மேலும், அங்கு பணிபுரியும் காவல் அதிகாரிகள் மற்றும் ஆளினர்களிடம் குறைகளை கேட்டறிந்தார்.

தொடர்ந்து, இன்னும் ஓரிரு மாதங்களில் வரவிருக்கும் இரண்டாம் நிலை காவலர்களின் அடிப்படை பயிற்சிக்கு தேவையான கட்டமைப்பு குறித்து காவல் அதிகாரிகளுடன் ஆலோசனை செய்தார். இந்த கலந்தாய்வு கூட்டத்தில் திருச்சி காவல் பயிற்சிப் பள்ளி முதல்வர் பாரதிதாசன், துணை முதல்வர் செங்குட்டுவன், திருச்சி பணியிடை பயிற்சி மைய துணை கண்காணிப்பாளர் சுதர்சன், தஞ்சாவூர் பணியிடை பயிற்சி மைய துணை கண்காணிப்பாளர் ஜான் கென்னடி மற்றும் ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள், போலீஸார் கலந்துகொண்டனர்.

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: சர்வே எண்.140/3, நான்கு சாலை, BSNL அலுவலகம் எதிரில், பரமாத்திவேலூர், நாமக்கல், தமிழ்நாடு-638 182

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண். 8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	கடன் நிலுவைத் தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை (EMD)
1183210090000025 1. M/s.தி மொபைல் ஷாப் 2. Mr.சிலம்பனன் மாறன் 3. Mrs.நிர்மலா	(i) 16.11.2022 (ii) 14.11.2022 அன்றுள்ளபடி ₹ 33,31,227/- (ரூபாய் முப்பத்து மூன்று லட்சத்து முப்பத்தொன்றாயிரத்து இருநூற்று இருபத்தேழு மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 12.04.2023 & நேரடி சுவாதீனம் - 10.04.2025	28.10.2025 அன்றுள்ளபடி ₹ 54,11,425.21 (ரூபாய் ஐம்பத்து நான்கு லட்சத்து பதினொன்றாயிரத்து நானூற்று இருபத்தைந்து மற்றும் பைசா இருபத்தொன்று மட்டும்)	₹ 28,10,600/- (ரூபாய் இருபத்தெட்டு லட்சத்து பத்தாயிரத்து அறுநூறு மட்டும்)	₹ 2,81,060/- (ரூபாய் இரண்டு லட்சத்து எண்பத்து ஒன்றாயிரத்து அறுபது மட்டும்)

சொத்து விவரம்: கரூர் பதிவு மாவட்டம், வேலாயுதம்பாளையம் சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட பழைய சர்வே எண்.1075, புதிய சர்வே எண்.1075/2, பழைய வார்டு 9, புதிய வார்டு 8, மனை எண்.12, கதவு எண்.50, 2வது தெரு, பன்னாம் சத்திரம் மெயின் ரோடு, புஞ்சை புகலூர் தெற்கு கிராமம், புதுக்குருக்கு பாளையம், புஞ்சை புகலூர் பேப்பர் மில் டவுன் பஞ்சாயத்து, மண்மங்கலம் தாலுகா, தற்போது புகலூர் தாலுகா, கரூர் மாவட்டம் என்னும் முகவரியில் கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 33 அடி, தெற்கு பக்கம் 31 அடி, தெற்கு வடக்காக இரு பக்கமும் 50 அடி ஆகமொத்தம் 1600 சதுர அடி அதற்கு சமமாக 148.64 சதுர மீட்டர் நிலம், அதனுடன் வழக்கமான பொது உரிமைகள், மதில் சுவர், கழிவுநீர் வசதிகள், வழிப்பாதை மற்றும் அனுபந்த உரிமைகள், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: மலர்மன்னன் வீடுக்கு கிழக்கு, சர்வே எண்.1076-ல் உள்ள தெற்கு வடக்கு ரோடுக்கு மேற்கு, 30 அடி அகல கிழக்கு மேற்கு ரோடுக்கு வடக்கு, சுப்பையன் வீடுக்கு தெற்கு.

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 05.12.2025 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி: 04.12.2025 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம் 03.12.2025 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி : Mr.ராம்பிரசாத் - 95009 96689 / Mr.டீஜோ சாஜன் – 78451 92961

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான M/s.C1 India PVT LTD. மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு Mr.பிரபாகரன் Mob.74182 81709) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை https://www.bankeauctions.com-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடருந்து பெற்றுக் கொள்ளலாம். M/s. C1 India PVT LTD, Helpline Number's-7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.
விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com

ஒப்பம்/-
தேதி: 11.11.2025, இடம்: பெங்களூரு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

கந்தர்வக்கோட்டையில் கோட்டாட்சியர் அலுவலகம் அமைக்க எம்எல்ஏ மனு

■ புதுக்கோட்டை

கந்தர்வக்கோட்டையில் கோட்டாட்சியர் அலுவலகம் அமைக்க வேண்டும் என தமிழக முதல்வரிடம் எம்எல்ஏ சின்னதுரை கோரிக்கை விடுத்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டம் களமாவூர் அரசு விழாவுக்கு நேற்று வந்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் கந்தர்வக்கோட்டை தொகுதி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எம்எல்ஏ சின்னதுரை அளித்த கோரிக்கை மனு:

கந்தர்வக்கோட்டை வங்காரஓடை குளத்தை தூர் வாரி, பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய பூங்கா அமைக்க வேண்டும். கந்தர்வக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அறிவிக்கப்பட்டுள்ள பச்சிளம் குழந்தை பிரிவுக்கான புதிய கட்டிடம் கட்ட வேண்டும். கந்தர்வக்கோட்டையில் பயணியர் மாளிகை மற்றும் ஆய்வு மாளிகை அமைக்க வேண்டும். கந்தர்வக்கோட்டையில் கோட்டாட்சியர் மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகம் அமைக்க வேண்டும். கீரனூரில் அரசு கலை அறிவியல் கல்லூரி அமைக்க வேண்டும். கறம்பக்குடிக்கு அறிவிக்கப்பட்ட புறவழிச் சாலை பணிகளை தொடங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படும்முன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்கொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் குழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

AU SMALL FINANCE BANK
Registered Office:19-A Dhuleshwar Garden, Jaipur, Rajasthan, India, 302001.
www.aubank.in

LOAN AGAINST GOLD - AUCTION NOTICE ON "AS IS WHERE IS" BASIS

The below mentioned borrower/s have been issued notices to pay their outstanding amounts towards the loan against gold facilities availed from AU Small Finance Bank Limited ("Bank"). Since the borrower/s has/have failed to repay his/their dues, we are constrained to conduct an auction of pledged gold items/articles on 11 December 2025 between 11:00 AM – 3:00 PM (Time) at below mentioned branches according to the mode specified therein. In the case of deceased borrowers, all conditions will be applicable to legal heirs. Please note that in the event of failure of the above auction, the bank reserves its right to conduct another auction without prior intimation.

E-Auction Branch Details (E-auction will be conducted by using Weblink - https://gold.samil.in

AVADI -25660000123945|AVDUAIYARKOIL -25660000077660|MANACHANNALLUR -25660000093409|MANNARGUDI -25660000290878 25660000405655 25660000097352|Mount Road -L90010901395295 15|NAGAPATTINAM -25660000165465|PUDUCHERRY - BHARATHI STREET -25660000127767|SHOLINGHUR -25660000148607|TAMBARAM -CHENNAI -24660001796921|TiNDIVANAM -25660000132007|TIRUPPUR -25660000088219

Note: The auction is subject to certain terms and conditions mentioned in the bid form, which is made available before the commencement of auction.

Sd/-
Manager
AU Small Finance Bank Limited

பாங்க் ஆப் இந்தியா Bank of India BOI
கோயம்புத்தூர் மண்டலம்

அடமானம் வைக்கப்பட்ட தங்க நகைகள் / ஆபரணங்கள் / காசுகளை பொது ஏலத்தில் விடுவதற்கான அறிவிப்பு

கீழே குறிப்பிட்டுள்ள நகைக்கடன் பெற்ற கடன்தாரர்கள், அவர்தம் சட்ட பூர்வ வாரிசுகள், தங்க நகை / ஆபரணம் / காசு ஆகியவற்றின் வணிகத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள் மற்றும் பொது மக்களுக்கு இதன் மூலம் தெரிவித்துக் கொள்வது யாதெனில் தொடர்ச்சியான நினைவூட்டுகள் / அறிவிப்புகள் ஆகியவை வங்கியால் அனுப்பப்பட்டிருப்பினும், கீழ் குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் வங்கிக்கு வைத்துள்ள நிலுவையைத் திரும்பச் செலுத்தவில்லை.
அவர்கள் தங்களது கடன் கணக்கிற்கெதிராக நிலுவையிலுள்ள அனைத்துத் தொகையையும் (நாளது தேதி வரையான வட்டி மற்றும் பிற அனைத்துக் கட்டணங்கள், பொறுப்புகள் / செலவினங்கள் உள்ளிட்டவை) 27.11.2025 க்குள் செலுத்தத் தவறினால் அவர்கள் அடமானம் வைத்துள்ள தங்க நகைகள் / ஆபரணங்கள் / காசுகள் ஆகியவை வங்கி வளாகத்தில் 28.11.2025 அன்று காலை 11.00 முதல் பிற்பகல் 3.00 மணி வரை பொது ஏலத்தில் விடப்படும் என்ற அறிவிப்பு இதன் மூலம் வெளியிடப்படுகிறது. இதனால் தொடர்புடைய கடன்தாரர்களுக்கு ஏற்படும் எவ்வித இடைஞ்சல்களுக்கும், செலவினங்களுக்கும் வங்கி எவ்விதத்திலும் பொறுப்பேற்காது மற்றும் இவ்விஷயம் தொடர்பாக எந்த ஒரு கடன்தாரரிடமிருந்து வரும் எந்த ஒரு கோரிக்கையும் குற்றச்சாட்டும் வங்கியால் நிராகரிக்கப்படும்.
இந்த ஏலத்தில் கலந்துகொள்ள விரும்பும் நபர்கள் ரூ.500/– ஐ குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் கிளை மேலாளரிடம் வைப்புத் தொகையாகச் செலுத்திவிட வேண்டும். இறுதி ஏலத்தில் பங்கேற்கும் நபர்கள் ஏலம் எடுத்த 24 மணி நேரத்திற்குள் ஏலத்தொகை முழுவதையும் வங்கிக்குச் செலுத்தாவிடில், அவர் வங்கிக்குச் செலுத்தியுள்ள வைப்புத் தொகை வங்கியால் திரும்பத்தரப்படாது. வங்கி, ஏலத்தில் கிடைக்கும் தொகை போதுமானதாக இல்லை எனவோ அன்றிக்குறைவானது எனவோ கருதினால் எந்த ஒரு காரணமும் காட்டாது ஏலத்தை ரத்து செய்ய உரிமையுடையதாகும். மேலும் தேவையெனில் வங்கி மேலே சொல்லப்பட்ட ஏல அட்டவணையில் குறிப்பிட்ட தேதி, நேரத்தை மாற்றவோ அல்லது எந்த ஒரு காரணமும் காட்டாது அதனை ரத்து செய்யவும் உரிமையுடையது.

கரூர் SME கிளை

வ. எண்.	கணக்கு எண்கள்.	கடன்தாரர்களின் பெயர்	முகவரி	மொத்த எடை கிராம்
1	826474110000003	ராஜமாணிக்கம்	எண்.91, பிச்சாகவுண்டனூர்.K, பிச்சம்பட்டி அஞ்சல், கரூர் – 639 118	16.1

தேதி : 10.11.2025
இடம் : கோயம்புத்தூர்
அதிகாரம்பெற்ற அலுவலர்
பேங்க் ஆப் இந்தியா

केनरा बैंक Canara Bank
भारत सरकार का उपक्रम A Government of India Undertaking
सिंडिकेट Syndicate

கனரா வங்கி, சொத்து மீட்பு மேலாண்மை கிளை, செயின்ட் மேரிஸ் வளாகம், வட்ட அலுவலகம், முதல் தளம், கீழ வெளி வீதி, மதுரை–625001.

விற்பனை அறிவிப்பு (அசையும் & அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு)

பிணைக்காப்பு, நிதிச் சொத்து மறுசீரமைப்பு, பிணைச் சொத்து பாதுகாப்பு அமலாக்கச் சட்டம் 2002 & பிணைக் காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002–இன் விதி 8(6)–இன் கீழ் அசையும் & அசையாச் சொத்து விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு. இதன் மூலம் பொது மக்கள் & குறிப்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) மற்றும் அடமானதாரர்(கள்) ஆகிய அனைவருக்கும் அறிவிப்பது யாதெனில், எங்கள் வங்கியின் கடன்தாரர் M/s.ஆர்.எம்.பி.ஆர். டிரேடிங் கீபர்ம் மற்றும் அதன் பார்ட்னர்கள் திரு.E.N.தினேஷ்ராஜ், திரு.P.மஹாலிங்கம், திரு.K.யோகராஜ் & திரு.R.சிவசங்கர் ஆகியோர் மதுரை சொத்து மீட்பு மேலாண்மை கிளைக்கு செலுத்த வேண்டிய கடன் நிலுவைத் தொகை 31.10.2025 அன்று ரூ.12,56,75,763.21 (ரூபாய் பன்னிரெண்டு கோடியே ஐம்பத்தாறு இலட்சத்து எழுபத்தைந்தாயிரத்து எழுநூற்று அறுபத்து மூன்று & பைசா இருபத்தொன்று மட்டும்) + 01.11.2025 முதல் வட்டி, செலவினங்களுடன் வசூலிக்கும் பொருட்டு, கனரா வங்கி, மதுரை சொத்து மீட்பு கிளையின் அங்கீகாரம் பெற்ற அதிகாரியால் கையகப்படுத்தப்பட்டுள்ள பின்வரும் அசையும் & அசையா சொத்துக்களை, "எங்கு உள்ளதோ", "எப்படி உள்ளதோ", "எந்நிலையில் உள்ளதோ அப்படியே" முறையில் 29.11.2025 அன்று மின்னணு ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.
i) அசையா சொத்து விவரம் : உரிமையாளர்கள் : M/s.ஆர்.எம்.பி.ஆர்.டிரேடிங் கீபர்ம் அதன் பார்ட்னர்கள் :–
திரு.E.N.தினேஷ்ராஜ், திரு.P.மஹாலிங்கம், திரு.K.யோகராஜ் & திரு.R.சிவசங்கர் ஆகியோர் பெயரில் உள்ள சொத்துக்கள். கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி தாலுகா, தேத்துப்பட்டி கிராமம், S.F.எண்.468/2–இல் உள்ள மொத்தம் ஹெக்டேர் 2.84.5 ஏர்ஸ் (ஏக்கர் 7.03 சென்டுகள்) நிலமும் மற்றும் கட்டிடமும். இந்த சொத்தின் நான்கு மால் : வடக்கே–சர்வே எண்.466 & 467–இல் உள்ள மயிலா கவுண்டர் & பிறர் நிலம், தெற்கே–கிழமேல் பொது வழிப்பாதை ரோடு, கிழக்கே–சர்வே எண்.470–இல் உள்ள சென்னிமலை நாயக்கர் & பிறர் நிலம், மேற்கே–சர்வே எண்.468/1A & 468/1B–இல் உள்ள தனபால் & அசோகன் நிலம். மொத்தம் ஹெக்டேர் 2.84.5 ஏர்ஸ் (ஏக்கர் 7.03 சென்டுகள்) நிலத்துடன் கூடிய அடிப்படை உரிமைகள், வழக்கமான வழிப்பாதை மற்றும் பிற உரிமைகள், மேலும் அந்நிலத்தில் உள்ள அனைத்து வசதிகளடங்கிய தொழிற்சாலை கட்டிடம் கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி தாலுகாவில் அமைந்துள்ளது.
ia) அசையும் சொத்துக்களின் விவரம் : 1. Induction Furnace : Consists of Medium frequency induction Melting furnace with power supply unit Manually operated change over switch Coil cradle assembly with accessories Furnace titling Structure Capacitor rack with electrical accessories, Solid state power supply unit with panel and accessories, 12 U wall mount rack with accessories, 2. Hydraulic Baling Press consists of 1 Hydraulic system with accessories, Frames and Motors, 3. EOT Crane Capacity— 15 Ton and Capacity-- 25 Ton, 4. Mobile Crane, 5. Weigh Bridge with accessories (Capacity –100 Ton), 6. Plate bending Machine, 7. Aluminum coil Electromagnet lift & Heavy duty Electromagnet lift, 8. Pollution control equipment --scrubber, 9. Disel generator Make--Powerica, 10. Water cooling system with accessories, 11. Furnace Transformer, 12. Vacuum Circuit Breaker, 13. HT Transformer, 14. Indoor and Outdoor VCB with all accessories, 15. Electrical Panel Boards, Under Ground Cables and other electrical accessories.

நிர்ணயிக்கப்பட்ட விலை சொத்து–I :	ரூ.4,27,00,000/- (ரூபாய் நான்கு கோடியே இருபத்தேழு இலட்சம் மட்டும்) முன்வைப்புத் தொகை : ரூ.42,70,000/- (ரூபாய் நாற்பத்து இரண்டு இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்)
நிர்ணயிக்கப்பட்ட விலை சொத்து–Ia) :	ரூ.45,05,000/- (ரூபாய் நாற்பத்தைந்து இலட்சத்